## ஆகஸ்ட் - 18

**"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதை பிடித்துக் கொள்ளுங்கள்." - 1 தெச 5 : 21.**

கர்த்தருடைய ஜனங்கள் எவ்வாறேனும் எப்பொழுதாகிலும் தீர்க்க தரிசனங்களையோ அல்லது பொதுவான பிரசங்கங்களையோ அதிகமாக நன்கு மதிக்க நேரிட்டால், அதற்குச் சமமாக அவர்கள் கேட்கிறதைத் தகுந்த விதமாய் சோதிக்காமலும், நுட்பமாய்ப் பிழைபார்க்காமலும், ஏற்றுக்கொள்ளாதிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் கேட்கும் எல்லா விஷயங்களையும் பரீட்ச்சித்துப்பார்க்க வேண்டும். எது நியாயமாகவும் வேதாகம ரீதியாகவும் ஆதரிக்கப்படுகிறது என்றும், எது வெறும் ஊகமும் பெரும்பாலும் நல்லது போலத் தோன்றி ஆனால், உண்மையாகவே நல்லதல்லாததும் ஏமாற்றக்கூடியதுமாயிருக்கிறதென்றும் வித்தியாசப்படுத்தப் பழக வேண்டும். தெய்வீக வார்த்தையின் சோதனைக்கு நிற்கக் கூடியதும், பரிசுத்த ஆவிக்கு இணக்கமாக இருக்கிறது என்றும் நிரூபிக்கப்படுகிற எல்லாவற்றையும் இறுகப்பற்றிக்கொள்ளும் நோக்கத்தோடு, தாங்கள் கேட்கிறவைகளை அவர்கள் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சோதனைகளுக்கு நிற்காத எதுவாயிருந்தாலும், அவைகளை உடனடியாக ஏற்க மறுத்து விட வேண்டும். **- Z ’03, 26(R 3135)**

குருக்கள்தான் தெய்வீக அதிகாரம் பெற்றுப் போதிக்கிற பிரதிநிதிகள் என்றும், அவர்களுக்கு ஜனங்கள் சந்தேகமின்றி, மதிப்பையும் கீழ்ப்படிதலையும் கொடுக்க வேண்டும் என்கிற உரிமை தங்களுக்கு உண்டு என்று சொல்லத்தக்கதாக சாத்தான் குருக்களின் தெய்வீக உரிமையின் உபதேசத்தை உண்டாக்கி அதை வழக்கத்திலிருக்கச் செய்திருக்கிறான். அவன் இந்த உபதேசத்தின் மூலமாக கிட்டத்தட்ட முழு உலகத்தையும் ஏமாற்றுவதில் வெற்றியடைந்திருக்கிறான். அப்படிப்பட்ட தீய பலன்களைக் கொடுக்கக் கூடிய ஒரு உபதேசத்தின் செல்வாக்கின் கீழ் தன்னுடைய குமாரர் இருக்க தேவன் விரும்புகிறதில்லை. ஆகையால், ஏற்றுக்கொள்ளுவதற்காகத் தங்களிடம் சமர்பிக்கப்படுகிற எல்லா காரியங்களையும் கவனமாக சோதிக்கவும், அவைகள் தனக்குத்தானேயும், வேதாகம வாக்கியங்களோடும், வேத உபதேசங்களோடும், தேவனுடைய குணத்தோடும், மீட்கும் பொருளின் உபதேசத்தோடும் உண்மைகளோடும் தேவனுடைய நோக்கங்களோடும் இணக்கமானவைகளாக இருக்கின்றனவா என்று உரிமையுடன் கேட்கவும், இப்படிப்பட்ட பூரணமான நியாயமான சோதனைகளுக்கு நிற்கும் காரியங்களை மட்டும் பற்றிக் கொள்ளவும் அவர்களுக்கு அவர் உத்தரவு இடுகிறார். **- P ’32, 112.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யாத் 23:7; நீதி 28:5; ஏரே 29:8; மத் 24:4; யோவா 5:39; 1கொரி 2:15; 14:29; பிலி 4:8; எபி 10:23,24; 2பேது 1:15-21; 1யோவா 4:1-3; வெளி 2:2.**

**கோபுர வாசிப்பு : Z ’10, 297 (R 4684)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் விசுவாசிக்கும்படி ஒப்புவிக்கப்பட்டவைகளைப் பரிசோதித்துப் பார்த்தேனா ? எப்படி? ஏன் ? பலன்கள் எவை?**